**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **STC No. 409 of 2024** |
| Deposition of witness | : | **PW-1** |
| Name | : | சுப்பிரமணியம் |
| Father Name | : | காளியப்பன் |
| Age | : | **49** |

***Accused present.***

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 24.07.2025.*

முதல் விசாரணை

1. நான் தற்போது வெங்கமேட்டில் வசித்து வருகிறேன். நான் குன்னத்தூர் தொரவலூர் ரோட்டில் உள்ள எஸ்வி டெக்ஸ் பனியன் கம்பெனியில் கட்டிங் மாஸ்டராக உள்ளேன். 01.06.2024 ஆம் தேதி மதியம் 01.45 மணியளவில் உணவுக்காக வீட்டுக்கு வந்து கொண்டிருந்தேன். திருவள்ளுவர் நகரில் இருந்து வெங்கமேடு செல்லும் ரோட்டில் வடக்கே இருந்து தெற்கு நோக்கி நான் TN 39 F 6402 என்ற பதிவு எண் கொண்ட டிவிஎஸ் சாம்ப் வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன்.

2. அச்சமயம் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி TN 09 6131 என்ற பதிவு எண் கொண்ட மாருதி சுசுகி 800 வாகனம் வந்து கொண்டிருந்தது. அந்த வாகனம் அதிக வேகமாக வந்து சாலையின் வளைவில் திரும்பியபோது போது சாலையில் இடதுபக்கம் வந்து கொண்டு இருந்த என் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதில் எனக்கு வலது காலில் பலத்த அடி ஏற்பட்டது. இரண்டு பக்கம் கால் முறிவு ஏற்பட்டது. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஆஜர் எதிரி தான் ஓட்டி வந்தார்.

3. அருகே இருந்த வேலுச்சாமி என்பவர் எனக்கு முதலுதவி அளித்து

ஆம்புலன்ஸ் மூலம் என்னை சுபம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக கோயம்புத்தூர் கங்கா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். நான் முதலில் 19 நாள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று. பின்பு வீட்டிற்கு வந்துவிட்டு மீண்டும் அறுவை சிகிச்சைக்காக பத்து நாள் அனுமதிக்கப்பட்டேன். சம்பவத்திற்கு மறுநாள் நான் கங்கா மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் அங்கு வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்று கையொப்பம் வாங்கினார்கள். நான் அதில் படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் **(**புகார் வாக்குமூலம் அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**).** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு பதிவு சான்று இல்லை என்றால் சரியல்ல உள்ளது. நான் அந்த பதிவு சான்று போலீஸில் தரவில்லை என்றால் சரிதான். எனக்கு வாகன ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. நான் அதை போலீஸில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான். குன்னத்தூர் - தொரவலூர் ரோட்டில் திரும்பியவுடன் வளைவு உள்ளதா என்றால் உள்ளது. அந்த வளைவில் வரும்போது வளைவிற்கு மறுபுறம் வரும் வாகனங்கள் தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். சம்பவ சாலை குறுகிய சாலை என்றால் சாலையின் இருபுறமும் உள்ள மண் தடம் எல்லாம் சேர்த்து 40 அடி இருக்கும்.

2. சம்பவ இடத்தின் அருகே விபத்தின் போது யாரும் இல்லை என்றால்

மேற்புறமாக இரண்டு மூன்று பேர் வந்தார்கள். விபத்தின் போது எதிரி ஓட்டி வந்த காருக்கும் அந்த நபர்களுக்கும் இடையே சுமார் 20 அடி தொலைவு இருக்கும். அந்த நபர்கள் யார் என்று தெரியுமா என்றால் அப்போது தெரியாது. என்னிடம் போலீசார் என்னுடைய வாகனத்தின் காப்பீடு, பதிவு சான்று, எனது வாகன ஓட்டுனர் உரிமம் ஆகியவற்றை கேட்டனர் என்றால் சரிதான். ஆனால் நான் அதை கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் மேற்சொன்ன ஆவணங்கள் இல்லாத காரணத்தினால்தான் அவற்றை நான் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல.

3. சம்பவசாலையில் இருபுறமும் டிச் உள்ளது என்றால் சரிதான். நான்தான் வாகனத்தை சரியாக ஓட்டத் தெரியாமல் எதிரி அவரது வாகனத்தில் ஒலி எழுப்பியும், நான் அதனை கண்டுகொள்ளாமல் சாலையின் வலது புறமாக ஏறி சென்று எதிரே வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை நானாக ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல, நான் எதிரே வாகனம் வருவதைப் பார்த்து இடது ஓரமாக சென்றும் கூட என் மீது வாகனம் மோதி விட்டது. நான் பயன்படுத்திய வாகனம் சாலையில் இயக்க போதிய தகுதி சான்று இல்லாத வாகனம் என்றால் அந்த வாகனத்திற்கு பராமரிப்பு செய்து வந்தேன், ஆனால் தகுதிச் சான்று பெறவில்லை. எனக்கு ஏற்பட்ட விபத்திற்காக நஷ்ட ஈடு பெற வேண்டி எதிரியின் மீது பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்சாட்சி அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி அவரது வாகனத்தை வேகமாக ஓட்டவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2025.07.24 19:13:19 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **STC No. 409 of 2024** |
| Deposition of witness | : | **PW-2** |
| Name | : | செல்வராஜ் |
| Father Name | : | கன்னியப்பன் |
| Age | : | **45** |

***Accused present.***

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 24.07.2025.*

முதல் விசாரணை

1. நான் தற்போது வெங்கமேட்டில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். 01.06.2024 ஆம் தேதி மதியம் 01.45 மணியளவில் நான் வேலை விஷயமாக சென்றுவிட்டு திருவள்ளுவர் நகரில் இருந்து வெங்கமேடு செல்லும் ரோட்டில் எனது வீட்டிற்கு முன்னாடி தெற்கு நோக்கி வந்துகொண்டிருந்தேன். நான் சாலையின் வளைவு அருகே வந்தபோது திருவள்ளுவர் நகரில் இருந்து வெங்கமேடு நோக்கி வந்த சேம்ப் வாகனமும், வெங்கமேட்டில் இருந்து திருவள்ளுவர் நகரை நோக்கி வந்த 800 வாகனமும் வளைவில் மோதிக்கொண்டது. நான் அதனை நேரடியாக பார்த்தேன். விபத்தின் போது டிவிஎஸ் சாம்ப் வாகனம் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தது. அதேசமயம் 800 வாகனம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து சாலையின் வளைவில் மறுபக்கம் ஏறி திரும்பியது போது சேம்ப் வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது.

2. இந்த விபத்தின் காரணமாக சுப்பிரமணி குழிக்குள் விழுந்துவிட்டார். நான் சென்று பார்த்தபோது அவரது வலது காலில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. என்னை

குழிக்குள் இருந்து அவரை எடுக்குமாறு சொன்னார். ஆனால் ஏற்கனவே எனக்கு கால் அடிபட்டு காலில் பிரச்சனை இருந்ததால் என்னால் உள்ளே இறங்கி எடுக்க முடியவில்லை. அருகே இருந்தவர்கள் வந்தவுடன் அவர்கள் உதவியுடன் அவரை மீட்டு ஆம்புலன்ஸில் அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டியவர் பார்ப்பதற்கு ஆஜர் எதிரியைப் போல் தான் இருந்தார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்

<u>குறுக்கு விசாரணை</u>

1. அடிபட்ட சுப்பிரமணி எஸ்வி டெக்ஸ் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். விபத்திற்கு முன்னர் எனக்கு அவரை தெரியாது. பின்னிட்டு தான் அவரைப் பற்றி தெரிந்து கொண்டேன். விபத்தானது எனது வீட்டிற்கு நேர் எதிரில் நடைபெற்றது. என்னுடைய வீடு கிழமேல் ரோட்டுக்கு வடபுருமாகவும் தென் வடல் ரோட்டுக்கு மேற்கு திசையில் உள்ளது. சாலையின் இருபுறமும் பள்ளம் உள்ளது என்றால் சரிதான். நான் விபத்தின் போது வீட்டிற்குள் இருந்து சத்தம் கேட்டு வெளியே வந்தேன் என்றால் சரியல்ல. சுப்ரமணியம் என்னை தாண்டி தான் அவருடைய இருசக்கர வாகனத்தில் சென்றாரா என்றால் ஆமாம்.

2. சம்பவ சாலையின் வழியாக தான் புகார்தாரர் சுப்பிரமணியம் அடிக்கடி சென்று வருவார் என்றால் சரிதான். அவ்வாறு எத்தனை ஆண்டுகளாக அந்த வழியில் சுப்பிரமணியம் சென்று வருகிறார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. நான் விபத்தை நேரில் பார்க்காமல் நேரில் பார்த்ததாக பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சாலை குறுகிய சாலை என்றால் சரிதான். அந்த வழியே வரும்

வாகனங்கள் பொதுவாக மெதுவாக வரும் என்றால் சரிதான். அந்த சாலையில் வேகத்தடை எதுவுமில்லை. சம்பவத்தின் போது எதிரி அவரது பகுதியில் தான் இருந்தார் என்றால் இல்லை அவரது வாகனம் மறுபுறம் ஏறி சென்று தான் விபத்து ஏற்படுத்தியது. நான் சொல்லும் விதத்தில் விபத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B
DHARANEETHER

Digitally signed by B
DHARANEETHER
Date: 2025.07.24 19:13:30
+0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,

ஊத்துக்குளி.

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | **STC No. 409 of 2024** |
| Deposition of witness | : | **PW-3** |
| Name | : | சண்முகம் |
| Father Name | : | கிருஷ்ணசாமி |
| Age | : | **35** |

***Accused present.***

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 24.07.2025.*

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது வெங்கமேட்டில் வசித்து வருகிறேன். நான் கட்டிட வேலை கான்ட்ராக்டராக உள்ளேன். கடந்த 01.06.2024 ஆம் தேதி மதியம் 01.30-01.45 மணியளவில் நான் வெங்கமேட்டில் இருந்து சாப்பிட்டுவிட்டு குன்னத்துரை நோக்கி சென்று கொண்டிருந்தேன். அப்போது எனக்கு முன்னால் சுமார் 40 அடி தொலைவில் மாருதி சுசுகி 800 கார் சென்று கொண்டிருந்தது. எஸ் வி கே தோட்டத்திற்கு அருகே உள்ள வளைவில் கார் வேகமாக வந்து திரும்பிய போது எதிர் திசையில் சாலையின் ஓரமாக டிவிஎஸ் சாம்ப் வாகனத்தில் வந்து கொண்டு இருந்த சுப்பிரமணியம் என்பவர் மீது மோதி விபத்து ஏற்பட்டது.

2. விபத்தில் அவர் கீழே விழுந்ததில் அவருக்கு வலது காலில் பலத்தஅடி ஏற்பட்டது. அவரது காலில் தோல் உரிந்து விட்டது. ஆம்புலன்ஸ் வந்தவுடன் முதலில் சுபம் மருத்துவமனைக்கு சென்று முதலுதவி செய்து கொண்டு அங்கிருந்து கோயம்புத்தூர் கங்கா மருத்துவமனைக்கு சென்றோம். நானும் உடன் சென்றேன். சம்பவத்தின் போது விபத்தை ஏற்படுத்திய காரை ஆஜர் எதிரி தான் ஓட்டினார். இந்த

வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்

<u>குறுக்கு விசாரணை</u>

1. சாட்சி சுப்பிரமணி எஸ்வி டெக்ஸ் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். நானும் அவரும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அவர் எனக்கு என்ன உறவு என்றால் உறவு இல்லை, தெரிந்தவர். நான் சம்பவஎங்க இருந்துச்சி இடத்தை இருக்கும் போலீசாருக்கு அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். சுப்பிரமணி நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

2. சம்பவ இடத்தின் அருகாமையில் சாட்சி செல்வராஜின் வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி செல்வராஜன் வீட்டின் முன்னால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் செல்வராஜ் வீட்டிலிருந்து சுமார் நூறடிக்குள் கிழபுரம் விபத்து ஏற்பட்டது. அந்த சாலையின் வளைவு காரணமாக இருபுறமும் வரும் வாகனங்கள் தெரியாது என்றால் சரியல்ல, நன்றாக தெரியும். சுப்பிரமணி தான் வாகனத்தை சரியாக ஓட்டத் தெரியாமல் சாலையின் மையப்பகுதிக்கு ஏறி சென்று எதிரே வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை தாமாக ஏற்படுத்தி கொண்டார் என்றாலும், எதிரியின் அஜாக்கிரதையாலும் கவனக்குறைவாளும் விபத்தானது ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நானும் அவரும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER Digitally signed by B DHARANEETHER Date: 2025.07.24 19:13:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,

ஊத்துக்குளி.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | **STC No. 409 of 2024** |
| Deposition of witness | : | **PW-4** |
| Name | : | சதீஷ் |
| Father Name | : | தெய்வசிகாமணி |
| Age | : | **30** |

***Accused present.***

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 24.07.2025.*

முதல் விசாரணை

1. நான் தற்போது வெங்கமேட்டில் வசித்து வருகிறேன். நான் ஜேசிபி டிரைவராக உள்ளேன். கடந்த 02.06.2024 ஆம் தேதி காலை 10 மணி அளவில், நான் எனது டூவீலரில் வெங்கமேட்டில் உள்ள எனது வீட்டிற்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது சாலையில் ஒரு வளைவு அருகே போலீசார் விசாரித்து எழுதிக்கொண்டு இருந்தார்கள். நான் எனது வாகனத்தை நிறுத்தி விட்டு சென்று பார்த்தேன். அப்போது போலீசார் என்னிடம் அருகே இருக்கும் லேண்ட்மார்க் பற்றி கேட்டார்கள். நான் வரைபடத்தில் கையொப்பம் செய்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்

குறுக்கு விசாரணை

1. நானும் சுப்பிரமணியம் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனக்கும் அவருக்கும் எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால், வேலைக்கு செல்லும்போது அவ்வப்போது பார்த்துக் கொள்வோம். போலீசார் என்னை காவல் நிலையத்தில் விசாரிக்கவில்லை. நானும் சுப்பிரமணியம் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2025.07.24 19:13:52 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,

ஊத்துக்குளி.